FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூலை - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

| தரம் :- 12 (2020) | கிறிஸ்தவம் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி I

**அறிவுறுத்தல்கள்**
- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) "வெளிப்பாடு" என்பதற்கான கிரேக்கச் சொல்.
 1. தியோ  2. அபோகளிப்ஸ்  3. பிபிலியா
 4. வெளிப்படுத்தல்  5. தியோப்னெட்டோஸ்

2) திருமுழுக்கு யோவான் பிறந்த பிரதேசம்.
 1. கலிலேயா  2. சமாரியா  3. யூதா மலைப்பிரதேசம்
 4. யோப்பா  5. எமோரியா

3) யூத அரச பரம்பரையில் சிறந்ததோர் அரசன்,
 1. மெல்கிசெதேக்  2. யோசியா  3. யோயாக்கிம்
 4. சாலமோன்  5. யோவேல்.

4) மோசேயின் புதுமைகள் மிக அழுத்தமாக வர்ணிக்கப்படும் மரபானது,
 1. E  2. J  3. D  4. P  5. வாய்மொழி மரபு

5) குருக்கள் பாரம்பரியத்தில் இறைவனை அழைத்தது.
 1. யாவே  2. சாலோம்  3. அடோனாய்
 4. பரம தந்தையே  5. எலோகிம்

6) குலமுதுவர்களின் யுகத்திற்கு உட்படும் காலப்பகுதி ஆவது,
 1. கி.மு 2000 – 1700 வரை  2. கி.மு 2300 – 2000 வரை
 3. கி.மு 2600 – 2300 வரை  4. கி.மு 1400 – 1100 வரை
 5. கி.மு 1700 – 1400 வரை

7) தொ.நூல் 15 : 17 இன் படி "புகைந்து கொண்டிருந்த தீச்சட்டியும் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தமும்" அடையாளப்படுத்துவது.
 1. மோயீசனை  2. ஆபிரகாமை  3. தூய ஆவியை
 4. யேசுவை  5. இறைவனை

8) "அபாத்" என்னும் எபிரேயச் சொல்லின் பொருள் ஆவது.
 1. பண்படுத்தல்  2. பாதுகாத்தல்  3. பயிரிடுதல்
 4. நடுதல்  5. தூசு

9) கானான் தேச எல்லையை அடையும் வரை இஸ்ராயேலர் உண்ட உணவு ஆவது
 1. புளியாத அப்பம்  2. மன்னா  3. காடைகள்
 4. திராட்சை இரசம்  5. கசப்புக் கீரை

agaram.lk

10) "சொத்து" என்பதன் எபிரேயச் சொல் ஆனது
1. பறின் 2. கொஹேன் 3. மம்ளேகெற் 4. செகுல்லா 5. கொக்கடேஸ்

11) "மகனே சீயோன் ! மகிழ்ந்து களிகூரு ...." இந்த அழைப்பு பற்றி இறைவாக்குரைத்த இறைவாக்கினர் ஆனவர்.
1. எசாயா 2. ஏரேமியா 3. செக்கரியா
4. செப்பனியா 5. எசேக்கியேல்

12) திருப்பாடல் தொடர்பாக ஆழமான ஆய்வொன்றை முதன் முதலாகச் செய்த விவிலிய வல்லுநர்.
1. தூய ஜஸ்டின் 2. தூய ஜெரோம் 3. தூய அத்தனாசியார்
4. ஹேமன் குண்கன் 5. தோமஸ் அக்குவைனஸ்

13) யேசுவை குற்றவாளியாக முறைப்பாடு செய்து முதலாவதாக அழைத்து சென்ற இடம்.
1. தலைமைச் சங்கத்துக்கு 2. தலைமைக்குரு வீட்டுக்கு
3. மூப்பர் சங்கத்துக்கு 4. எருசலேமுக்கு
5. ஆளுநர் வீட்டுக்கு

14) பழைய ஏற்பாட்டில் ஞான இலக்கியத்திற்கு உட்பட்ட ஏழு நூல்களில் இரண்டு ஆவன,
1. திருப்பாடல், ரூத் 2. யோபு, எஸ்தர் 3. யோபு, ரூத்
4. நீதிமொழிகள், நெகேமியா 5. சபை உரையாளரை, சாலமோன் ஞானம்

15) நீதியோடும், நியாயத்தோடும் வாழ்வதற்காக இறைவனில் நம்பிக்கை வைத்து இப்பாடல்கள் பாடப்பட்டன.
1. நன்றிப் பாடல் 2. ஞான பாடல் 3. புலம்பல் பாடல்
4. அரச பாடல்கள் 5. நம்பிக்கையின் பாடல்

16) கூடாரக் கைத்தொழிலில் மிகவும் பிரசித்தி பெற்று திகழ்ந்த நகரம்.
1. எபேசு 2. கலிலேயா 3. செதுக்கியா 4. தர்சு 5. பார்ப்போ

17) இரு மூலக் கொள்கையின் படி மத்தேயு, லூக்கா நற்செய்திகளுக்கான மூலகங்களாவது,
1. மாற்குவும் G உம் 2. மாற்குவும் L உம் 3. G உம் L உம்
4. Q உம் M உம் 5. மாற்குவும் M உம்

18) பின்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க.
A. "இறைவனின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப் பிழைத்தேன்"
B. "துன்புறும் ஊழியன்" என்ற உருவை ஏற்றவர்.
C. பெனியேல் என்ற இடத்தில் இறைவனின் தூதர் ஒருருடன் மற்போரிட்டவர்.
D. எருசலேம் மக்களைத் தைரியப்படுத்தியவர்.
குலமுதுவர் யாக்கோபோடு தொடர்புடைய கூற்று.
1. A உம் B உம் 2. B உம் C உம் 3. A உம் D உம்
4. C உம் D உம் 5. A உம் C உம்

19) பவுல் எருசலேமில் பிற இனத்தவரால் காட்டிக் கொடுக்கப்படுவார் என செசாரியாவில் தீர்க்க தரிசனம் கூறியவர்.
1. அந்திப்பாஸ் 2. ஸ்கேவா 3. அகபு
4. பிலிப்பு 5. பர்ணபா

20) சாதோக் குருவின் பரம்பரையில் வந்தவர்கள்.
1. பரிசேயர் 2. சதுசேயர் 3. செலஸ்தியர்
4. எபூசியர் 5. எஸ்சேனியர்

(20 x 1 = 20 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி II

அறிவுறுத்தல்.

❖ **பகுதி I இல் இரண்டு வினாக்களையும், பகுதி II இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

1) 1. புனித பவுலின் முதலாவது பயணத்தில் பயணத்தோழர்களாக இணைந்து கொண்ட இருவரின் பெயர்களைத் தருக. (1 x 2 = 02 புள்ளிகள்)
   2. புனித பவுலின் இரண்டாவது மறைத்தூதுப் பயணத்தில் பிலிப்பில் இடம்பெற்ற பிரதான சம்பங்கள் இரண்டு எழுதுக. (2 x 2 = 04 புள்ளிகள்)
   3. புனித பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் (எபேசியர் 5 : 22 – 6 : 4) மணமானவர்களுக்கு கூறும் அறிவுரைகள் மூன்று எழுதுக. (3 x 2 = 06 புள்ளிகள்)
   4. புனித பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் யேசுவின் தாழ்ச்சி அவரை மகிமை பெறச் செய்தது. அவரிடத்தில் காணப்பட்ட பண்புகளை அடிப்படையாக வைத்து இன்றைய இளையோருக்கு கிடைக்கக்கூடிய வழிகாட்டல்கள் நான்கு தருக. (4 x 2 = 08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2) 1. கிறிஸ்துவின் காலத்தில் யூத சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத குழுக்கள் இரண்டின் பெயரை எழுதுக. (02 புள்ளிகள்)
   2. ஆணாதிக்கம் நிலவிய யூத சமூகத்தில் பெண்கள் தொடர்பாக இரு விடயங்களை உள்ளடக்கி விபரிக்குக. (04 புள்ளிகள்)
   3. பெண்கள் தொடர்பாக திருச்சபை செயற்பட்ட முறையை மூன்று விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)
   4. உமது கிறிஸ்தவ குழுமத்தில் ஒடுக்கப்பட்டோருக்காக நீர் செய்யக்கூடிய பணிகள் நான்கினைத் தருக. (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3) 1. கி.மு 8 – கி.மு 4 நூற்றாண்டு காலப்பகுதியில் இறைவாக்குரைத்த இறைவாக்கினரில் எழுத்து வடிவம் பெற்ற பெரிய இறைவாக்கினர் ஒருவரையும், எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் ஒருவரின் பெயரையும் தருக. (02 புள்ளிகள்)
   2. நீர் குறிப்பிடும் எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் பற்றி குறிப்பிடும் நூல்கள் இரண்டு தருக. (04 புள்ளிகள்)
   3. நீர் குறிப்பிடும் எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினரின் தூதுப் பணியில் காணப்பட்ட விசேட பண்புகள் மூன்று எழுதுக. (06 புள்ளிகள்)
   4. இன்றைய காலத்தில் இறைவாக்கினரைப் போல் செயற்பட நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் நான்கு தருக. (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி – II

4) 1. தூய பவுல் தனது மறைத்தூதுப் பயணங்களின் போது எதிர்கொண்ட சவால்கள் ஐந்தினை தந்து விளக்குக.
   2. தூய பவுலின் வாழ்வின் முன் மாதிரிவகைகளில் இருந்து இன்றைய கிறிஸ்தவ வாழ்வுப் பயணத்திற்கு கிடைக்கும் வழிகாட்டல்கள் ஐந்து எழுதுக. (20 புள்ளிகள்)

5) 1. யேசுவின் காலத்தில் காணப்பட்ட யூத சமூக மரபுகளாக சமயச் சட்டங்கள், சமயச் சடங்குகள் இவ்விரண்டினையும் விளக்குக.
   2. இன்றைய உலகில் சமய சட்டங்கள் மூலம் எமது ஆன்மீக வாழ்வில் எதிர்கொள்ளும் பாதகமான விடயங்களை விபரிக்குக. (20 புள்ளிகள்)

6) 1. தொடக்க நூலில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் காணப்படும் பாவத்தின் வளர்ச்சியின் சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிட்டு, அவற்றில் முன்வைக்கப்படும் செய்திகள் இரண்டு வீதம் விளக்குக.
   2. இன்றைய உலகில் பாவத்தின் விளைவால் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை விபரிக்குக. (20 புள்ளிகள்)

agaram.lk